2020 ஜனவரி 7]

பகுதிகளில் கிட்டத்தட்ட 25,434 குடிநீர்த் தொட்டிகளை எங்கு அவசியம் இருக்கிறதோ அந்த இடங்களில் கட்டியிருக்கிறோம். சில இடங்களில் டேங்க் தேவையில்லை எனும்போது, bore *போட்டு, தண்ணீர் எடுக்கக்கூடிய சூழ்நிலை இருந்தது என்றால், அங்கு* bore *போட்டு, தண்ணீர் கொடுக்கப்படுகிறது. அதேபோன்று, தற்போது எல்லாப் பகுதிகளிலும்* R.O. water *கொடுக்கிறோம். முன்பு கிராமப்புறங்களில் இதுபோன்று கொடுத்தது கிடையாது, தற்போது கொடுக்கிறோம். அதேபோன்று, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் கிராமங்களில் 99.11% குழாய்கள்மூலம் குடிநீர் கொடுக்கிறோம். ஆகவே, எந்தப் பகுதியில் குடிநீர் தேவை இருக்கிறதோ, அதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மீதமிருக்கிற கேள்விகள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

4. தகவல் கோரல்

குடியுரிமை திருத்தச் சட்டம் குறித்து சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியுரிமை திருத்தச் சட்டத்தைப் பற்றி இந்த அவையிலே தீர்மானமாகக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுமென்று நான் ஏற்கெனவே தங்களுக்குக் கடிதம் மூலமாக எழுதியிருக்கிறேன். எனவே, அதுகுறித்து ஒரு சிறு விளக்கத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை. நீங்கள் இதுகுறித்த ஒரு தீர்மானத்தை இந்த அவையிலே கொண்டுவர வேண்டுமென்று சொல்லி, என்னிடம் ஓர் அறிவிப்புக்*

கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய நடவடிக்கையிலே இருக்கிறது. அந்த நடவடிக்கையில் இருக்கிற பொருள் குறித்து நான் முடிவெடுக்காதபோது, அதை அவையிலே நீங்கள், அது என்ன ஆயிற்று என்று கேட்கலாமேயொழிய, நீங்கள் அதைப்பற்றி detail ஆகப் பேசுவதற்கு அனுமதியை நான் வழங்குவது என்பது முறையாக இருக்காது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. அதை நீங்கள் எனது கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். அது குறித்து, நான் விரைவாக, முடிவு சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நீங்கள் கேளுங்கள். அதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. (குறுக்கீடுகள்) நீங்கள் என்னவென்று சொல்லுங்கள். அதற்குள் detail ஆகப் போக வேண்டாம். கடிதத்தை எனது கையில் வைத்துக்கொண்டு, நான் allow செய்துவிட்டால் அதற்கு meaning இல்லாமல் போய்விடும். (குறுக்கீடுகள்) ஆகவே, நீங்கள் என்னவாயிற்று என்று கேளுங்கள். அதற்குண்டான பதிலை நான் விரைந்து உங்களுக்குச் சொல்லுவேன்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய பி.ஜே.பி. அரசு கொண்டு வந்திருக்கின்ற குடியுரிமை திருத்தச் சட்டம், இந்த நாட்டினுடைய ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் உகந்த சட்டமாக இல்லை என்கிற காரணத்தால் நாடு முழுவதும் இதற்கு மிகப் பெரிய எதிர்ப்பு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியாததல்ல. நீங்கள் அந்தத் தீர்மானத்தை என் கையில் கொடுத்திருக்கிறீர்கள். நான் அதை என்னுடைய நடவடிக்கையில் வைத்திருக்கிறேன். நடவடிக்கையிலே இருப்பதை இவ்வளவு detail ஆக பேசிவிட்டீர்களென்றால், பிறகு அவையிலே அந்தத் தீர்மானத்தை என்ன செய்வது என்பது இருக்கிறது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. அது வேண்டாம். (குறுக்கீடுகள்) வேறு ஏதாவது பிரச்சினைகளை நீங்கள் zero hour–ல் raise செய்வதாக இருந்தால் நான் அனுமதிக்கிறேன். குடியுரிமை திருத்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், நீங்கள் என்னிடத்திலே ஒரு தீர்மானமாகக் கொடுத்திருக்கிறீர்கள். அதை நான் என்னுடைய பரிசீலனையில், நடவடிக்கையில் வைத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நான் என்ன என்பதைச் சொல்கிறேன். அதை நீங்கள் வற்புறுத்த முடியாது. (குறுக்கீடுகள்) அதற்குண்டான விதி இல்லை. விதிகளில், எத்தனை நாள், என்ன, ஏது என்றெல்லாம் இருக்கிறது. அதுவல்லாமல் மற்ற விவரங்களையும் நான் பார்க்க

வேண்டியிருக்கிறது. அதையெல்லாம் பார்த்து நான் ஒரு முடிவை நிச்சயமாக எடுப்பேன். அதுவரையில் நீங்கள் அவையில் அதை raise *செய்ய முடியாது;* discuss *செய்ய முடியாது. வேறு ஏதாவது நீங்கள்* raise *செய்வதாக இருந்தால் நான் அனுமதிக்கிறேன்.*

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைக் கூட்டம் இன்னும் இரண்டு நாட்கள்தான் இருக்கிறது. 9 ஆம் தேதி சபைக் கூட்டம் முடியப்போகிறது. அதனால் அதற்கான விளக்கத்தைக் கேட்கிறேன். அதற்கு அனுமதிக்க வேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு, நீங்கள் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அது எப்படி? (குறுக்கீடுகள்) என்னுடைய ஆய்வில் இருப்பதை நீங்கள் வற்புறுத்த முடியாது.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

திரு. துரைமுருகன்: இதற்கு பெரிய ஆய்வு வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் இல்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவரும், நானும் பேசிக்கொண்டிருக்கிறோமல்லவா! அதற்குள் நீங்கள் எல்லோரும் எழுந்தால் எப்படிச் சரியாக இருக்கும்? (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வேலு, உங்களுக்கும்தான். நீங்கள் உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் ஒரு தீர்மானத்தை என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள். அந்தத் தீர்மானத்தை நான் எடுத்துக்கொள்வதற்கு எனக்கு சில விதிகள் இருக்கின்றன அல்லவா? (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் ஒரு மூத்த உறுப்பினர். உங்களுக்கு அது நன்றாகத் தெரியும்.*

திரு. துரைமுருகன்: விதிகள் இருக்கின்றன. அது தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விதிகள் இருக்கின்றன. நான் அந்த விதிகளையும் பார்க்க வேண்டும். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த அந்த நிகழ்வையும் பார்த்து, இருக்கிற சூழ்நிலையை அனுசரித்து நான் முடிவெடுக்க வேண்டும். ஆகவே, உரிய முடிவை, உரிய நேரத்தில் எடுப்பேன். நீங்கள் உடனே செய்ய*

வேண்டுமென்று இப்படியெல்லாம் என்னைக் கேட்க முடியாது. (குறுக்கீடுகள்)

திரு. துரைமுருகன்: நாங்கள் அப்படிக் கேட்கவில்லை. ஐயா, நாங்கள் அப்படிக் கேட்கவில்லை. பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் அப்படிக் கேட்கவில்லை. (குறுக்கீடு) எனக்கு மைக் கொடுக்கச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசுங்கள். மைக் கொடுங்கள்.

திரு. துரைமுருகன்: நாங்கள் அப்படிக் கேட்கவில்லை. நீங்கள் ஆய்வு செய்வது நல்லதுதான். அதைப் பாராட்ட வேண்டும். சட்டப் புத்தகங்களையெல்லாம் பார்க்க வேண்டும். அது எங்களுக்குப் பொருட்டல்ல. சபைக் கூட்டம் இருப்பதே, இரண்டு நாட்கள்தான். நீங்கள் என்ன சொல்கிறீர்களென்று கேட்டால், நான் ஆய்ந்து, நிதானித்து, அதனுடைய நுண்மான் நுழைபுலன்களை அறிந்து சபை முடிவற்குள் எடுத்துக்கொள்கிறேன் என்று ஒரு பொன்னான வார்த்தையைச் சொல்லிவிட்டீர்களென்றால் நாங்கள் உட்கார்ந்துகொள்கிறோம். (குறுக்கீடு) நீங்கள் எடுக்கிறீர்களென்ற உறுதி எங்களுக்கு வேண்டாமா?

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, உறுதியெல்லாம் இல்லை. தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய நடவடிக்கையில் இருக்கிறது. அந்த நடவடிக்கையை (குறுக்கீடு) நான் நடவடிக்கை எடுப்பதற்கு முன், என்ன, ஏது என்று ஆய்ந்து முடிவு எடுப்பதற்கு முன், என்னை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்வது சரியல்ல.

திரு. துரைமுருகன்: கடைசியில் எடுக்காமல் போய்விட்டீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. அது எப்படி? ஒரு தீர்மானம் என்று கொடுத்தால், எதிர்க்கட்சித் தலைவருக்கும், எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கும் தெரியாதது இல்லை. தீர்மானம் என்று ஒன்று கொடுத்திருக்கிறீர்கள். நான் விதிப்படி எல்லாவற்றையும் பார்க்க வேண்டும். பார்த்துவிட்டுத்தான் நான் முடிவெடுக்க முடியும். நீங்கள் கொடுத்ததினால், நான் அனுமதிக்க வேண்டுமென்ற கட்டாயமும் இல்லை, மறுக்க வேண்டுமென்ற கட்டாயமும் கிடையாது. நான் ஆய்ந்து, முடிவெடுப்பதற்கு, நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். உரிய நடவடிக்கை உரிய நேரத்தில்

2020 ஜனவரி 7] [பேரவைத் தலைவர்]

எடுக்கப்படும். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், வேறு ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடே பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. எனவே, இந்தச் சூழ்நிலையில், நீங்கள் இதைத் துரிதமாக எடுத்துக் கொள்ளவேண்டும். உங்களைக் கட்டாயப்படுத்தவில்லை, எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் கோரிக்கை வைக்கிறோம். நாடு முழுவதும் கலவரங்கள், மறியல், ஆர்ப்பாட்டம், ஆங்காங்கே துப்பாக்கிச்சூடு, பேரணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இது நாட்டு மக்களுடைய. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, நீங்கள்* detail *ஆகப் போகிறீர்கள், வேண்டாம். நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) கொடுத்திருக்கிறீர்கள், நான் அதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) என்னுடைய நடவடிக்கையில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) அது என்னுடைய நடவடிக்கையில் இருக்கிறது. அதற்கு நான் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுப்பேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உரிய நேரத்தில் அதற்கு நடவடிக்கை என்ன என்பது உங்களுக்குத் தெரிவிக்கப்படும். (குறுக்கீடுகள்) திரு. கரி. இராமசாமி, என்ன சொல்லுங்கள்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டினுடைய ஒற்றுமைக்கு இன்றைக்கு தீங்கு விளைவிக்கப்பட்டிருக்கிறது. அதுசம்பந்தமாக இந்த சட்டமன்றத்திலே பேச வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். அதற்குரிய அனுமதியை நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசி, அதற்கு நான் ஒரு* ruling *கொடுத்துவிட்டேன். திரும்பவும் அதையே சொல்கிறீர்களே! (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதுவெல்லாம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அதுசம்பந்தமாக எந்த அனுமதியும் கிடையாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

(இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள் அவையிலிருந்து வெளியேறினார்.)

(மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள் அவையிலிருந்து வெளியேறினார்.)

5. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் 8-வது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக, Panel of Chairmen ஆக நியமிக்கின்றேன்:

1. திரு. பி.எம். நரசிம்மன்
2. திரு. எஸ்.பி. சண்முகநாதன்
3. திரு. சு. ரவி
4. திரு. இரா. குமரகுரு
5. திரு. சு. குணசேகரன்
6. திரு. வி.வி. இராஜன் செல்லப்பா

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.

***மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 6 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு@ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

@ 275 முதல் 315 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.